**மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் - 2015**

---

மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிய மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 2000 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவக சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்காக பயன்தரு ஆயுட்காலத்தை இனங்காணும் போது ஏற்பட்ட வழுக்களின் காரணமாக ரூபா 47,450,180 கிரயமான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்களைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கை**

அரசாங்க மானியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமானத் தேய்வு தொடர்பாக காலக்கழிவு செய்யும் கொள்கை கணக்குகளின் ஊடாக வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 7,250,000 தொகையான தேறிய பெறுமதி மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,901,167 வரை குறைவடைந்திருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறை வேலைக் கணக்கின் மீதியை பட்டோலையுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 891,200 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் நீண்ட கால முதலீடுகளின் பெறுமதி ரூபா 14,335,190 ஆக இருந்த போதிலும், சமர்ப்பிக்கப்பட்டுள்ள விரிவான அட்டவணைகளில் பெறுமதி ரூபா 14,164,403 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 170,787 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**2.3 பெற வேண்டிய கணக்குகள்**

உடன்படிக்கையை மீறிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,481,830 பணம் சேமலாப நிதியத்திலிருந்து அறவீடு செய்யும் இணக்கப்பாடு வெளியிடப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை | |
| | XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் வரவை உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டிற்காக ரூபா 64,883,895 ஊதியம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| | XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5 ஆம் உப பிரிவு | 2012 மே மாதத்தின் போது சேவையிலிருந்து இராஜினமா செய்த உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 38,080 மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்து ரூபா 3,754,212 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 682,036 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் பற்றாக்குறை ரூபா 3,072,176 இனால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினத்திற்காகக் கிடைத்த அரசாங்க மானியம் ரூபா 14,420,000 இனால் அதிகரித்திருந்த போதிலும், ஆளணி வேதனங்கள் ரூபா 19,313,843 இனால் அதிகரித்தமை பற்றாக்குறையின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

கடந்த 05 வருடங்களின் நிதி விளைவுகளை கவனத்தில் கொள்ளும் போது 2012, 2014 மற்றும் மீளாய்வாண்டில் நிதி விளைவில் பற்றாக்குறையைக் காண்பித்திருந்தது. ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறமானத் தேய்வு மற்றும் அரச வரிகளுக்கான சீராக்கங்களின் பின்னரான பங்களிப்பில் அதிகரிப்பினை காண்பித்திருந்ததுடன் அது மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 11,152,226 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்படுகின்ற கல்வித்துறைகளில் உயர்கல்வியை வழங்குதல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் போன்ற அடிப்படைப் பணிகள் பல்கலைக்கழகங்களினால் மேவுகை செய்யப்படுவதுடன் தொழில்நுட்ப நிறுவகம் நான்கு பீடங்களைக் கொண்டுள்ளதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அதில் பதிவு செய்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை 1220 ஆகும்.

(அ) மீளாய்வாண்டில் இறுதியாண்டிற்காக நடாத்தப்பட்ட பரீட்சை பெறுபேறுகளின்படி பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 430 ஆக இருந்ததுடன் அதில் 296 மாணவர்கள் அதாவது 69 சதவீதம் பரீட்சையில் சித்தியடைந்திருந்ததுடன் 134 மாணவர்கள் அதாவது 31 சதவீதம் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் ஒவ்வொரு கல்விப் பிரிவுகளிலும் மாணவர்கள் முதலாம் வருட பரீட்சையில் 85 சதவீத சித்தி எதிர்பார்க்கப்பட்ட போதிலும் சித்தியடைந்திருந்த சதவீதம் 62 இற்கும் 74 இடைப்பட்டதாக இருந்தமையால் எதிர்பார்த்த இலக்கு அடையப்பெற்றிருக்கவில்லை.

### 4.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு

ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப நிறுவக அபிவிருத்தி என்ற இரண்டு நிதியங்களினதும் பெறுமதியான ரூபா 693,002 தொகை எவ்வித பணிகளிலும் ஈடுபடுத்தப்படாது 10 வருட அளவிலான காலம் முதல் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்நுட்ப நிறுவகத்தின் கணக்காய்வு நடவடிக்கைகள் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளரின் மேற்பார்வையின் கீழ் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு இணைப்புச்செய்யப்பட்ட ஒரு எழுதுவிளைஞரினால் நிறைவேற்றப்படுகின்றது. இது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயற்திறன் மற்றும் வினைத்திறன் குறைவடைந்தமைக்கு தாக்கமளித்திருந்தது.

(ஆ) அபிவிருத்தி செயற்திட்ட உத்தேச முறைமைகளின் செயன்முன்னேற்றத்தைத் தீர்மானித்தல், செயற்திட்டம் தொடர்பான பிரச்சினையான துறைகளை ஆராய்ந்து பார்த்தல், தளப்பரிசோதனைகளை மேற்கொள்ளல் போன்றன உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 4,000,000 தொகையான 18 உபகரண விடயங்கள் மற்றும் ரூபா 500,000 பெறுமதியான புத்தக இருப்புக்கள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்களை நியாயமான பெறுமதியில் கணக்குகளில் வெளிப்படுத்தப்படாமை |
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | உடன்படிக்கையை மீறிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக துரிதமாக நடவடிக்கை எடுக்காமை மற்றும் காணப்படும் சட்ட, விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| | கடன் அறவிடல் முறைப்படுத்தப்பட்டு துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |